Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 1 |
| Name | : செல்வராஜ், துணை ஆட்சியர் |
| Father`s Name | : மதனகோபால் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2018

**முதல் விசாரணை-** நான் தற்போது பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.3.2015ல் தாம்பரத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். எனக்கு முன்பாக வட்டாட்சியராக பணிபுரிந்த செந்தாமரை கண்ணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் SI No. 479/12 என்ற வழக்கில் சாட்சியம் அளித்திருந்ததின் பேரில் அதற்கான சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு 30.3.2015 அன்று ஆணையிடப்பட்டது. அந்த உத்தரவில், வழக்கோடு தொடர்புடைய பட்டா போலியானது என உத்தரவிட்டு அந்த பட்டா வழங்கப்படுவதற்கு காரணமாக இருந்த தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 2000ம் ஆண்டு பணிபுரிந்த அரசு அலுவலர்கள் மீதும் தவறான பட்டா பெற்ற திரு.நடராஜன் என்பவர் மீதும் தாம்பரம் வட்டாட்சியராக பணிபுரிந்த நான் சென்னை மாநகர காவல் ஆணையரிடம் புகார் அளிக்க வேண்டும் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன் பேரில் கடந்த 27.6.2015 அன்று நான் சென்னை மாநகர காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்தேன். அதன் அடிப்படையில் 07.07.2015 அன்று சென்னை CCB II காவல் ஆய்வாளரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு அன்றைய தினமே என்னிடம் விசாரணை செய்தனர். தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் என் வசம் இருந்த ஆவணங்களை சமர்பித்து பட்டா 585 என்னும் தாம்பரம் வட்டம் சிட்லபாக்கம் கிராமத்திற்குரிய பட்டா தவறானது என்பதனை மெய்பிக்கும் விதமாக ரெவினியூ பட்டா டிரான்ஸ்பர் ரெஜிஸ்டர் சமர்பித்தேன். அதில் 585 என்னும் பட்டா இரண்டு பகுதிகளாக தவறுதலாக வழங்கப்பட்டிருந்தது. இரு வேறு Dis RPT No. 3224/2000, 3326/2000 ஆகிய இரு எண்கள் பதியப்பட்டிருந்தது. ஆனால் இவை இரண்டும் முறையே பள்ளிக்கரணை மற்றும் மடிப்பாக்கம் கிராமத்திற்குரியது. ஆனால் வழக்கோடு தொடர்புடைய கிராமம் சிட்லபாக்கம். இந்த அடிப்படை ஆதாரத்திலிருந்தே திரு.நடராஜன் என்பவர் சமர்பித்த பட்டா தவறானது என ஊர்ஜிதமானதால் 2000ம் ஆண்டில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த நபர்களின் மீது என்னால் புகார் அளித்ததை எழுத்து மூலமாக CCB II காவல் ஆய்வாளரிடம் வழங்கப்பட்டது. அதன் பிறகு கடந்த 08.09.2015 அன்று நான் தாம்பரம் வட்டாட்சியர் பணியிலிருந்து மாற்றப்பட்டு வேறு பணியிடம் சென்றேன். இந்த வழக்கு தொடர்பாக நான் டாஸ்மார்க் நிறுவனத்தின் குடோன் மேலாளராக பணிபுரிந்து வந்த போது காஞ்சிபுரம் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்களால் அழைக்கப் பெற்று விசாரணை செய்யப்பட்டேன். விசாரணை நடந்த தேதி 15.04.2016. புகார் அளித்த தகவல்களை உறுதி செய்து வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அதசாஆ 1 ஆகும்.

மாண்புமிகு உயர்நீதிமன்றம் கொடுத்த உத்தரவு படி நான் இந்த புகாரினை கொடுத்தேன். மாண்புமிகு உயர்நீதிமன்றம் கொடுத்த உத்தரவானது அதசாஆ 2 (2வரிசை) ஆகும். அதே கிராமத்தை சேர்ந்த 1ம் எதிரி நடராஜன் த/பெ.நாராயணசாமி என்பவருக்கு இரண்டு பட்டா Dis RPT No. 3224/2000, 3326/ 2000 இவை இரண்டும் பட்டா எண் 585 என்று குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு வருவாய் கிராமத்தில் ஒரு குடியானவருக்கு எவ்வளவு விஸ்தீரணம் நிலம் இருந்தாலும் அவற்றை ஒரே பட்டா எண் கொடுத்து அதிலே உள்ள ஊரத்துக்களின் படி நஞ்சை, புஞ்சை என வேறுபடுத்தி ஒரே பட்டாவாக வழங்குவது வழக்கம். ஆனால் இந்த வழக்கை பொறுத்து ஒரே நபருக்கு ஒரு வருவாய் கிராமத்தை சேர்ந்தவருக்கு இரண்டு பட்டா 585ல் வழங்கப்பட்டுள்ளது. இதுவே இந்த பட்டா போலியான என்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது. 1ம் எதிரிக்கு வழங்கப்பட்ட 2 பட்டாக்கள் முறையே அதசாஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றாவணங்கள் குறியீடு செய்ததற்கு எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கடும் ஆட்சேபனை தெரிவித்தார்கள்.(கடும் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.) சிபிசிஐடி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நான் நடந்ததைச்சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 1 |
| Name | : செல்வராஜ், விரிவுரையாளர், பவானி சாகர் |
| Father`s / Husband's Name | : மதனகோபால் |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2018.

**சிஎம்பி நெம்பர் 1085/2018, 1888/2018 ஆகிய மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** தாம்பரம் தாலுக்கா அலுவலகம் 1997ல் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்னர் தாம்பரம், சைதாப்பேட்டை தாலுக்காவுடன் இருந்தது. 2010ம் ஆண்டு தாம்பரம் தாலுக்கா அலுவலகத்திலிருந்து சோழிங்கநல்லூர் தாலுக்கா அலுவலகம் 2010ல் தொடங்கப்பட்டது. நான் 16.03.2015 அன்று தாம்பரத்தில் வட்டாட்சியராக பொறுப்பேற்றுக் கொண்டேன். நான் வருவதற்கு முன்னால் செந்தாமரைக்கண்ணன் என்பவர் பொறுப்பில் இருந்தார். செந்தாமரக்கண்ணன் Commissioner of Revenue Administration எழிலகம் சென்னையில் பணியில் இருந்த போது அவரை 1 வருடத்திற்கு தாசில்தாராக தாம்பரம் தாலுக்காவிற்கு நியமிக்கப்பட்டார். அதன் பிறகு மீண்டும் அவர் Commissioner of Revenue Administration பணிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். செந்தாமரைகண்ணன் அவர்கள் தாம்பரம் தாலுக்கா அலுவலகத்தில் வட்டாட்சியாராக சுமார் ஆறு மாதம் காலம் பணியில் இருந்தார். அதன் பிறகு செய்யூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வட்டாட்சியராக பணியில் அமர்த்தப்பட்டார். மாண்புமிகு உயர்நீதிமன்றம் சென்னையில் Second Appeal 479/2012 என்ற வழக்கில் நீதிமன்ற சாட்சியாக செந்தாமரைகண்ணனை விசாரித்தார்கள் என்றால் சரிதான். 16.03.2015 முன்பு தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். O.S.20/2002 வழக்கானது மூல வழக்கு என்றால் சரிதான். செல்லைய்யா என்பவர் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 2000ம் ஆண்டு ஜுன் ஜுலை மாதங்களில் B5 பிரிவில் Register and Patta Transfer என்ற பதிவேட்டை பராமரித்து வந்தவர் என்பது எனக்கு தெரியாது. நான் புகாரை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கொடுத்தேன். Second Appeal 479/2012ன் படி உத்தரவு பிறபிக்கப்பட்டது. மாண்புமிகு உயர்நீதி மன்ற உத்தரவின் படி CW1 தாசில்தார் புகார் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது என்று சொன்னால் அரசு வழக்கறிஞர் ஏன் இன்னும் புகார் கொடுக்கவில்லை என்று கேட்டதின் பேரில் நான் புகார் கொடுத்தேன். CW1 ஆக தாசில்தார் செந்தாமரைக்கண்ணன் என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவிற்கு மாறுபாடாக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ 1 ஆன புகாரானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்தரவிற்கு நான் கடைப்பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுக்க போகும் போது அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 ஆனதை என்னுடைய அலுவலகத்திலிருந்து காவல் ஆணையாளர் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றேன் என்றால்

சரிதான். புகார் கொடுக்கும் போது இணைத்து கொடுத்தேன். அதன் பிறகு சிசிபி போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு சுமார் 15 நாட்கள் கழித்து என்னை சிசிபி போலிசார் சென்னைக்கு அழைத்து வந்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டார்கள். அப்போதும் அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 யை என்னிடம் போலிசார் காண்பித்தார்கள். சிட்லபாக்கம் கிராமத்தில் சர்வே நெம் 189/1 மற்றும் 190/2A என்ற சர்வே நெம்பரில் உள்ள நிலங்களையும் அதில் உள்ள வீட்டையும் முதல் எதிரியாகிய நடராஜன் என்பவருக்கு 14.03.1996 அன்று பதிவு செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தின் படி வீடு மற்றும் 1433 சதுர அடி செட்டில்மெண்ட் எழுதியது பற்றி எனக்கு தெரியாது. 1 ஏர் என்பது 2 .47 செண்ட் என்றால் சரிதான். 1433 சதுர அடி என்பது 3 . 30 செண்ட் அளவுக்கு வரும் என்றால் சரிதான். அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 உள்ள 1 ஏர் மற்றும் 0.5 என்பது 1635 சதுர அடி என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் 2433 சதுர அடிக்கு போலியான பட்டா தயாரிக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி 2433 சதுர அடிக்குண்டான போலி பட்டா அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 அல்ல என்றால் சரிதான். எங்கள் தாலுக்கா அலுவலகத்தினால் கொடுக்கப்படும் பட்டாவானது முன்பக்கத்திலும் பின் பக்கத்திலும் அச்சடிக்கப்பட்டு விவரங்கள் இருக்கும். அதை பூர்த்தி செய்த பிறகு தான் கொடுப்போம். 585 பட்டாவிற்கு ஒரு பட்டாவில் தான் எல்லா சர்வே நெம்பர்களும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். தாலுக்கா அலுவலகத்தில் இருக்கும் அனைத்து அலுவலர்களுக்கும் இது பற்றி தெரியும். பார்த்தவுடன் அதசாஆ3 மற்றும் அதசாஆ 4 போலியானது என்று சொல்லிவிடலாம் என்றால் சரிதான். அனுபவமுள்ள தாலுக்கா அலுவலகத்தில் உள்ள அலுவலர்களால் இது போல் நடக்காது என்றால் சரிதான். அதசாஆ 3 மற்றும் அதசாஆ4 ஆன எங்கள் அலுவலகத்தில் உபயோகப்படுத்தப்பட்ட Form அல்ல என்றால் சரிதான். 27.06.2015 க்கு பிறகு 3 மாதங்கள் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தேன், அதன் பிறகு மாறுதல் பெற்றுவிட்டேன். எங்கள் அலுவலகத்திலேயே நில விவரங்களான புலன் எண்- 189/1 A அதில் 1 ஏர் அளவிற்கு உரிமையாளர் பெயர் நடராஜன் என்பவருக்கு பட்டா வழங்கப்பட்டு கணிணியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் நிச்சயமாக கணிணியில் பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரிதான். என்னை சிபிசிஐடி போலிசார் காஞ்சிபுரத்திற்கு வரவழைத்து ஏப்ரல் 2016ல் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் போது அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனவே அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 யை நான் சென்னை ஆணையர் அலுவலகத்திற்கு சென்று புகார் கொடுக்கும் போது பார்த்தேன், அதற்கு பிறகு இதற்கு முன்பு சாட்சியம் அளிக்கும் போது தான் பார்த்தேன் என்றால் சரிதான். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் உயர்அதிகாரிகளுக்கு இது குறித்து தெரியாது என்றாலும் உயர்நீதிமன்ற ஆணையின் படி எனக்கு அதிகாரம் இல்லாத நிலையில் தவறான புகாரை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணையில் நான்காவது பாராவில் நீதிமன்ற சாட்சி 1 என்பவர் தான் சான்றாவணங்கள் A2 மற்றும் A3 பற்றி சென்னை ஆணையரிடம் புகார் கொடுக்க சொல்லியுள்ளது என்றாலும் வட்டாட்சியர் அலுவலகர்கள் புகார் கொடுக்க சொல்லவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றாலும் சரிதான். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 யை பற்றி இங்கு சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு எனக்கு அதை பற்றி ஒன்றும் தெரியாது என்றாலும் நீதிமன்றத்தில் நான் முதல் சாட்சியம் அளிக்கும் போது தான் நான் பார்த்தேன் என்றாலும் சரியல்ல.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** இரண்டாவது எதிரி தரப்பு வழக்கறிஞர் 3வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதின் பேரில் அனுமதிக்கப்பட்டது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 2 |
| Name | : நாகராஜ் |
| Father`s Name | : சிகாமணி |
| Village | : மாதாகோயில் தெரு, சேலையூர் |
| Taluk | : தாம்பரம் |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.03.2018.

**முதல் விசாரணை-** நான் தற்போது சிட்லபாக்கத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.09.2015ல் நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது தாம்பரம் வட்டாட்சியர் திரு.செல்வராஜ் அவர்கள் தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்பு கொண்டார். அவர் காஞ்சிபுரத்திலிருந்து சிபிசிஐடி ஆய்வாளர் வருவாகள். அவர்களுடன் சென்று காமராஜர் காலனிக்கு சென்று நடராஜன் என்பவருக்கு ஒரு வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது. அது சம்மந்தமாக விசாரணை செய்யும் போது நான் உடனிருக்க வேண்டும் என்று தகவல் சொன்னார். எனக்கு சுமார் மதியம் 1.00 மணிக்கு தகவலானது வந்தது. 5 நிமிடத்தில் சிபிசிஐடி ஆய்வாளர் அங்கு வந்துவிட்டார். நான் அவருடன் காமராஜர் காலனிக்கு சென்றேன். என்னுடன் பேரூராட்சி அலுவலக உதவியாளர் திரு.ராஜேந்திரபாபு என்பவரும் வந்தார். ஆய்வாளர் அந்த இடத்தில் விசாரித்த போது பேரூராட்சி செயல் அலுவலர் கிழக்கு மேற்காக ஒரு கால்வாய் ஒன்று போட்டு வைத்திருந்தனர். வடக்கே வேறு ஒரு நபருடைய சுற்றுசுவருடன் கூடிய ஒரு வீடு உள்ளது. தெற்கு பக்கத்தில் நடராஜன் என்பவருடைய வீடு இருந்தது. அந்த இடத்தில் 3 தென்னை மரம் மற்றும் 1 கொய்யாமரம் இருந்தது. மேற்கு பக்கம் காமராஜர் காலனியின் சாலை மற்றும் பூங்கா இருந்தது. பார்வை மகசர் தயார் செய்துக்கொண்டிருக்கும் போது என்னுடன் ராஜேந்திரபாபு என்பவரும் கையொப்பம் செய்தார். நான் சென்ற இடத்தின் சர்வே எண்-189/1 மற்றும் 190/2A. அதில் லேஅவுட் போட்டுள்ளார். அதில் 28வது பிளாட் திரு.நடராஜன் என்பவருடையது ஆகும். நடராஜன் என்பவர் அந்த இடத்தில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார். அங்கு போடப்பட்ட கால்வாயின் சதுரஅடி சுமார் 1000சதுர அடி ஆகும். ஆனால் இந்த வழக்கில் மனை வரைபடத்தில் அந்த இடத்தை ரோடாக குறிப்பிட்டுள்ளார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் அதசாஆ 5 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/-XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 2 |
| Name | : நாகராஜ் |
| Father`s / Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2018.

**சிஎம்பி நெம்பர் 1085/2018, 1888/2018 ஆகிய மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** நான் 2013ம் ஆண்டு 01.11.2013 அன்று சிட்லபாக்கம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தகப்பனார் சிகாமணி சிட்லபாக்கத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து 2009ல் இறந்து விட்டார். என் தகப்பனாருக்கு சிட்லபாக்கம் கிராமத்தில் உள்ள நிலங்கள் விவரங்கள் அனைத்தும் தெரியும். எனக்கு நில அளவை பற்றி எதுவும் தெரியாது. நான் சென்ற இடத்தில் ரோடு இருந்ததாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்றது இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மகசரை சிபிசிஐடி அதிகாரிகள் எழுதினார்கள். சுமார் மதியம் 1 மணி அளவில் இருக்கும் போது எழுதினார்கள். சாட்சி ராஜேந்திரபாபுவை சிபிசிஐடி போலிசார் சம்பவ இடத்திற்கு அழைத்து வந்தார்கள். அதசாஆ 5ல் கையொப்பம் செய்த பின்னர் என்னை சிபிசிஐடி போலிசார் கூப்பிடிவில்லை, சம்மன் வந்த பிறகு தான் நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலிசாருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சிபிசிஐடி அலுவலகத்திற்கு அழைத்து சென்று அதசாஆ 5ல் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் 08.09.2015 அன்று நான் கையொப்பம் போடவில்லை என்றாலும் சரியல்ல, 02.03.2017 அன்று காஞ்சிபுரத்தில் அதசாஆ5யை தயார் செய்து முன் தேதியிட்டு கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட ரோடு என்று சொன்ன இடத்தை சிட்லபாக்கம் பேரூராட்சி கைப்பற்றி அதை பொதுவாக பயன்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். போலிசாருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** இரண்டாவது எதிரி தரப்பு வழக்கறிஞர் 3வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதின் பேரில் அனுமதிக்கப்பட்டது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/—xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 3 |
| Name | : ராஜேந்திரபாபு |
| Father`s Name | : ஏகாம்பரம் |
| Village | : 245, விட்டிலாபுரம் ரோடு, புதுப்பட்டினம் |
| Taluk | : கல்பாக்கம். |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.03.2018.

**முதல் விசாரணை-** நான் தற்போது சிட்லபாக்கம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.09.2015ல் சிபிசிஐடி அலுவலகத்திலிருந்து ஆய்வாளர் சுமார் 1 மணியிலிருந்து 2 மணிக்குள் வந்தார். E.O. சந்திரகுமார் அவர்கள் என்னை அலுவலக வேலையாக வெளியில் செல்ல சொன்னதால் நான் அந்த சமயத்தில் வெளியில் சென்றிருந்தேன். சந்திரகுமார் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு என்னை அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார். அப்போது அவர் என்னிடம் காமராஜர் காலனி வழக்கு குறித்து நான் உயர்நீதிமன்றத்திற்கு ஏற்கனவே சென்று வந்ததால் அந்த வழக்கு குறித்து ஆய்வாளர் அவர்களுக்கு சில விவரங்கள் தெரிய வேண்டும் என்பதற்காக என்னை சிபிசிஐடி ஆய்வாளருடன் காமராஜர் காலனியில் உள்ள அந்த ஆக்கிரமிப்பு இடத்திற்கு சென்றோம். அங்கு சுமார் 1000சதுர அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இது சம்மந்தமாக தான் உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்துக்கொண்டிருந்தது. அங்கு அந்த இடத்தில் உள்ள சர்வே நம்பர்கள் 189/1 மற்றும் 190/2A ஆகும். அந்த காமராஜர் காலனி முழுவதும் 20 வருடத்திற்கு முன்பு பிரஸில் உள்ள ஆட்களுக்காக அந்த இடத்தை அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடம் ஆகும். அந்த மனைப்பிரிவில் ஆக்கிரமிப்பு செய்த 1000 சதுர அடியானது ரோடு போடுவதற்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடமானது முட்டு சந்தை கொண்டிருக்கும். முட்டுசந்திற்கு பின்புறம் இந்திராகாந்தி நகரை சார்ந்த வீடுகள் உள்ளது. ஆக்கிரமிப்பு செய்த இடத்தை நடராஜன் என்பவர் அவருடைய இடத்துடன் சேர்ந்து பட்டா வாங்கி வைத்துள்ளார். அந்த இடத்தில் 3 தென்னை மரம் மற்றும் 1 கொய்யாமரம் இருந்தது. வடக்கு பக்கமாக 3அடி அகலத்திற்கு மழைநீர் கால்வாய் கிழக்கு மேற்காக போடப்பட்டது ஆகும். மேற்கு பக்கத்தில் எங்கள் அலுவலகம் மூலம் சுற்றுசுவர் போட்டோம். தெற்கு பக்கத்தில் அந்த மனையினை ஆக்கிரமிப்பு செய்த நடராஜன் என்பவரின் வீடு உள்ளது. நாங்கள் போட்ட சுற்றுசுவருக்கு எதிர் திசையில் மேற்கு பக்கத்தில் பூங்கா ஒன்று அமைத்து நாங்கள் அதனை பராமரித்து வருகிறோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் அதசாஆ 6 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 3 |
| Name | : ராஜேந்திரபாபு |
| Father`s / Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2018.

**சிஎம்பி நெம்பர் 1085/2018, 1888/2018 ஆகிய மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** எங்களுக்கு பிளானிங் அப்புரூவல் கொடுப்பவர் Executive Officer தான். எனக்கு இந்த வழக்கு நிலத்தின் விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கடைநிலை ஊழியர் என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய ரோடு என்று சொல்வது இப்போது எங்கள் அலுவலக கட்டுபாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். என்னை காவல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்தில் கேள்வி கேட்டார்கள், நான் பதில் சொன்னேன், அதை அவர் குறித்துக் கொண்டார்கள் அவ்வளவு தான். அதசாஆ 6 ல் நான் காஞ்சிபுரத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் வைத்து அதசாஆ 6ல் கையொப்பம் செய்தேன்.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** இரண்டாவது எதிரி தரப்பு வழக்கறிஞர் 3வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதின் பேரில் அனுமதிக்கப்பட்டது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 88/2017 |
| Deposition of witness for | : PW 4 |
| Name | : மனோகரன், சார் பதிவாளர் |
| Father`s Name | : சுப்பையா பிள்ளை |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2018.

**முதல் விசாரணை-** நான் தற்போது சார் பதிவாளராக தாம்பரம் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.09.2015 அன்று குற்ற வழக்கு எண்- 1/2015 சம்மந்தமாக விசாரணைக்காக தாம்பரம் சார் பதிவாளர் அலுவலக செட்டில்மெண்ட் ஆவண எண் - 1196/1996ன் நகலை சான்றிட்டு வழங்குமாறு காஞ்சிபுரம் குற்றபுலனாய்வு துறை காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதற்கான சான்றிட்ட நகலை 22.09.2015 அன்று சார் பதிவாளர் அலுவலக கடித எண்- 04/2015 மூலம் வழங்கப்பட்டது. அந்த ஆவணமானது சிட்லபாக்கம் கிராம சர்வே எண் - 189/1 மற்றும் 190/2A இடத்திற்குட்பட்ட காமராஜர் காலனி, V தெருவில் உள்ள கதவு எண்- 28ன் சொத்து 1433 சதுர அடி உட்பட்ட சொத்திற்குண்டான ஆவணம் ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம் நான் சான்றிட்டு கொடுத்த ஆவணம் தான். நான் சான்றிட்டு வழங்கிய 1196/1996க்குண்டான ஆவணமானது ராஜேஸ்வரி என்பவர் தனது மகன் நடராஜன் என்பவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆகும். அந்த ஆவணம் அதசாஆ 8 ஆகும். (அந்த ஆவணம் சான்றிட்ட நகல் ஆவணம் என்பதாலும் இந்த வழக்கில் அந்த ஆவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததாலும் இதனை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் கடுமையான ஆட்சேபனை தெரிவித்ததால் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் இது சம்மந்தமாக விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஓம்/-XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.